# ஜூலை 1 தொடங்கி புதிய விகிதத்தில் போக்குவரத்து சம்மன்கள் -மாநகர் மன்றம்

நமது நிருபர்

கோலாலம்பூர், ஜூன் 30–
சாலைப் போக்குவரத்துச் சட்டம் 1987 (சட்டம் 333) மற்றும் அனைத்து துணை சட்டங்கள்படி வரும் திங்கள்கிழமை (1ஆம் தேதி) தொடங்கி போக்குவரத்துக் குற்றங்களுக்குப் புதிய அபராத விகிதம் அமல்படுத்தப்படும்.

இதில் மோட்டார் சைக்கிளுக்கு 1லிருந்து 15 நாட்களுக்கு (வெ.30), 16லிருந்து 30 நாட்களுக்கு (வெ.50), 31லிருந்து 60 நாட்களுக்கு (வெ.80) அபராதம் விதிக்கப்படும் என்று கோலாலம்பூர் மாநகர் மன்றம் தெரிவித்தது.

அதே சமயம் கார்களுக்கு 1லிருந்து 15 நாட்களுக்கு (வெ.50), 16லிருந்து 30 நாட்களுக்கு (வெ.80), 31லிருந்து 60 நாட்களுக்கு (வெ.100) அபராதம் விதிக்கப்படும்.



கனரக வாகனங்களை எடுத்துக் கொண்டால் 1லிருந்து 15 நாட்களுக்கு (வெ.200), 16லிருந்து 30 நாட்களுக்கு (வெ.250), 31லிருந்து 60 நாட்களுக்கு (வெ.300) அபராதம் விதிக்கப்படும் என்று ஓர் அறிக்கையில் மாநகர் மன்றம் குறிப்பிட்டது.